CC.No. 223/2021

P.W. 5

| | | |
|---|---|---|
| திரு .வெங்கடேஷ் | த/பெ. சங்கரநயினார் | Date: 11.08.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

**1.** அ.சா.1 க்கும் எதிரிக்கும் இடையே இடம் சம்பந்தமான பிரச்சனை உண்டு என்றால் சரிதான். அ.சா.1ன் கணவரும், நானும் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறோம் என்றால் சரிதான். எனது அப்பா சங்கர நயினார் பத்திர எழுத்தர். எனது சகோதரி பிரேமா பத்திர எழுத்தர் அலுவலகத்தில் தட்டச்சு செய்வார் என்றால் சரிதான். அ.சா.1ன் மாமானார் அழகு நம்பி கோனார் அவர்கள் இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பாக எனது தகப்பனார் மூலம் ஒரு உயில் எழுதி வைத்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த உயில் தட்டச்சு செய்த அலுவலகத்தில் எனது சகோதரி பிரேமா தட்டச்சராக இருந்திருக்கலாம். அந்த உயிலில் எதிரியின் சொத்தை உட்படுத்தி எழுதிக்கொடுத்ததாக எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் ஒரு சிவில் வழக்கும் நடந்து வருகிறது என்றால் சிவில் வழக்கு ஒன்று நடந்து வருகிறது.

2. எனது வீட்டின் தலைவாசல் வடக்கு பக்கமாகும். சத்தம் கேட்டு வரும்போது தெருவில் சுமார் 10 நபர்கள் கூடியிருந்தார்கள். இசக்கியம்மாளிடம் சம்பவம் குறித்து கேட்டேன். அவர் நடந்த விபரத்தை கூறினார். அதன்பின்னர் அவரது வீட்டிற்கு சென்றும் நடந்த விபரத்தை தெரிந்துகொண்டேன். நயினார் மகன் கல்யாணி சுந்தரம் என்பவரும் உரிமை பெற்ற பத்திர எழுத்தர் என்றால் சரிதான். அவர் எனக்கும், அ.சா.1ன் கணவருக்கும் நல்ல பழக்கம் என்றால் சரிதான். ஒரே அலுவலகம் என்பதால் பழக்கம் உண்டு. அ.சா.1ன் கணவரின் வீட்டை ஒட்டி தான் கிழக்கே எதிரி வீடு உள்ளது என்றால் சரிதான். ராஜ்குமார் சம்பவ சமயத்தில் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக நான் காவல் நிலையம் செல்லவில்லை. என்னிடம் போலீசார் வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை.

3. எனது அப்பா எழுத்தராக உயில் எழுதியது தொடர்பாக எனக்கும், எதிரிக்கும் முன்விரோதம் உண்டு என்றாலும் சரியல்ல. எனக்கும் , எனது

மனைவிக்கும் பிரச்சனை ஏற்பட்டபோது எதிரி எனது மனைவிக்கு ஆதரவாக செயல்பட்டு வந்தார் என்றால் சரியல்ல. அ.சா.1 எனக்கு அக்கா முறை. அ.சா.1 எனக்கு அக்காமுறை என்பதாலும், எதிரி மீது முன்விரோதம் இருந்ததாலும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், எனக்கும் இந்த வழக்கிற்கும் முன்பாகவே பேச்சுவார்த்தை கிடையாது என்றால் பேச்சுவார்த்தை கிடையாது. ஆனால் வழக்கிற்கு முன்பா, பின்பா என்று தெரியாது.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

Sd/-P. Moses Jebasingh,
Judicial Magistrate,
Valliyoor.